விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

www.edus.lk
eDUS
Learning made lovable
இலங்கையின் No.1 கல்வி நிறுவனத்துடன் இணைந்திடுங்கள்...!
தரம் 1 - G.C.E A/L வரை
Professional Courses for Everyone
0777 123 330
(11705)

சங்கு 23
ஒலி 167 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 21 சனிக்கிழமை (04.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தண்ணீர்த் தொட்டியில் விழுந்த 3 வயது சிறுமி பலி

### வவுனியா பூவரசன்குளம் பகுதியில் சம்பவம்



(வவுனியா)

வவுனியா பூவரசன்குளம் பகுதியில் தண்ணீர்த் தொட்டியில் விழுந்து 3 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் இருந்து தாய் ஒருவர் தனது பிள்ளையுடன் பூவரசன் குளம், நித்தியநகர் பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றிற்கு சென்றுள் ▷15

### வடமராட்சியில் விபத்து

## சாதாரண பரீட்சைக்கு தோற்றிய மாணவன் உயிரிழப்பு



(கரணவாய்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று தொலைபேசி கம்பத்துடன் மோதி பின்னர் மதிலுடன் மோதி விபத்துக் குள்ளானதில் மாணவன் ஒருவர் ஸ்தலத்தி லேயே பலியானதுடன் மேலும் ஒரு சிறுவன் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் குஞ்சர் கடை சந்தி - மண்டான் வீதி ▷15

## இன்றுமுதல் மின்கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் நள்ளிரவு முதல் புதிய மின் கட்டண திருத்தப் பட்டியல் அமுலாகவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் வரி அதிகரிப்புக்கு அமைவாக இவ்வாறு மின் கட்டணத்தில் திருத்தம் ▷15

## தொலைத் தொடர்பு வரி

### இன்றுமுதல் உயர்வு




(கொழும்பு)

நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தொலைத் தொடர்பு வரி அதிகரிக்கப்பட வுள்ளது.

அதற்கமைய குறித்த வரியானது 11.25 சதவீதத் தில் இருந்து 15 சதவீத ▷15

# நாட்டின் நிலைமை மேலும் மோசமடையும்

## உண்மை நிலைவரங்களை போட்டுடைத்தார் பிரதமர் ரணில்



- இலங்கையால் மீள்வது கடினம்.
- நெருக்கடியின் தொடக்கத்தில் மட்டுமே உள்ளோம்.
- உணவுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்.
- ஒரு நாளைக்கு இரு வேளை மட்டுமே சாப்பிடும் காலம் வரும்.
- நட்பு நாடுகளின் உதவியில்லாமல் இந்த ஆண்டை கடக்க முடியாது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## லாஃப் காஸின் புதிய விலை

### ரூ. 6,850?

(கொழும்பு)

லாஃப் சமையல் எரிவாயு கொள்கலனின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதனடிப்படையில், 12.5 கிலோ லாஃப் சமையல் எரிவாயு ▷15

### வன பாதுகாப்பு திணைக்களம்

## வடக்கு, கிழக்கில் கைப்பற்றிய வயல் காணிகளை விடுவிக்குக

### நெருக்கடி ஏற்பட்டதையடுத்து அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்பு



(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கில் வன பாதுகாப்பு திணைக்களம் கைப்பற்றிய வயல் காணிகளை விவசாயிகளுக்கு மீள வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. ▷15

## 21ஆவது திருத்த சட்டம் திங்கள் அமைச்சரவையில்

### அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

அரச தலைவர், பிரதமரையும் அமைச்சரவையையும் தன்னிச்சையாக நீக்கும் வகையில் 21 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் சரத்துக்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யோசனைக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் குறித்த யோசனைக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்ட நிலையில், பல திருத்தங்களுடன் ▷15

## அத்தியாவசியப் பொருட்களை இருப்பில் வைத்திருக்கவும்

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் போதுமான அளவு இருப்பு வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சில வர்த்தகர்கள் பொருட்களுக்கு தட்டுப்பாடு இருப்பதாகக் காட்டி விலையை அதிகரிக்கச் செய்யும் திட்ட ▷15

## நாடு முழுவதும் விவசாயப் புரட்சி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

நாடு தழுவிய ரீதியிலான விவசாயப் புரட்சியொன்றை முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் ▷15

## சொத்து குவிப்பு வழக்கு

### பஸில் விடுதலை

(கொழும்பு)

மல்வானை சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகிய இருவரும் விடுதலை செய்யப்பட்டுள் ▷15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **கனகசபை யோகநாதன் (சிறி)**

(வலம்புரி முன்னாள் ஊழியர்)



திதி: 04.06.2022 சதுர்த்தி

பிறப்பு:- 24.04.1951

இறப்பு:- 16.05.2021

நீங்கள் எங்களை விட்டு பிரிந்தாலும்
எங்களை விட்டு மறைந்தாலும்
நாங்கள் நினைத்தவுடன்
கண்களில் இருப்பீர் கண்ணீராக...

சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(11746)

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

---

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சிகள்
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 04.06.2022 சனிக்கிழமை தொடக்கம்
10.06.2022 வெள்ளிக்கிழமைவரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(C-4427)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309

---

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 42 பரப்பு காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500 m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(11749)

பார்வையிடும் நேரம்
**காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை**

ஒரு பரப்பின் விலை - **மூன்று இலட்சம்**

தொடர்பு:- 076 424 2090, 076 436 5814, 077 623 4204

---

## வேலணையில் 15 வயது சிறுமி மாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வேலணை, சரவணை பகுதியில் 15 வயதுடைய சிறுமி ஒருவர் காணாமல்போயுள்ளார்.

குறித்த சிறுமி தனியார் வகுப்பிற்குச் சென்ற நிலையில், காணாமல் போயுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் உறவினர்கள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

இதையடுத்து காணாமல்போன சிறுமியை தேடும் பணியினை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம)

---

# TECHNA
Technical Institute

## தொழில்நுட்பப் பிரிவு A/L 2024

புதிய பிரிவு ஆரம்பம்

05.06.2022 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.00 மணிக்கு

Engineering Technology, Bio Systems Technology, Science for Technology, Agricultural Science, ICT, Maths, Geography

அனுமதிகளை நேரடியாக பெற்றுக் கொள்ள முடியும்.
வீரசிங்கம் மண்டபம் 3ஆம் மாடி,
யாழ்ப்பாணம். 077 170 3549

(11748)

---

## நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த்தொட்டி, வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல் மாடி குளியல் அறைகள், நீரோடிகள்), வெடிப்புகள் நீர்க்கசிவுகளை உத்தரவாதச் சான்றிதழுடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

1 சதுர அடி ரூ.200/- முதல்

**Skyline Water Proofing**

மேலதிகமாக

Computer Service and Repair, Computer Software and OS Installation CCTV Camera Installation's and Repair எம்மால் செய்து தரப்படும்

No.89, Old Park Road, Jaffna.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743

(11742)

---

ONLINE CLASS

# A/L - 2024

zoom ஊடாக

பிரிவுக்கான கணித, உயிரியல் வகுப்புக்கள் ஆரம்பம்

## BIO & MATHS STREAM

தமிழ் மொழி மூலம் & English Medium

ஆரம்பம் - 04.06.2022 Sat 10.30 am

| | |
|---|---|
| PHYSICS<br>S.R.JEYAKUMAR<br>B.Sc, PGDE, PGDCT | PHYSICS<br>S.SRIKANAGASABAI<br>B.Sc, PGDE, M.sc |
| CHEMISTRY<br>V.PARAMESWARAN<br>B.Sc,PGDE | CHEMISTRY<br>V.SELVARANJAN<br>B.Sc,PGDE |
| BIOLOGY<br>V.UMASHANGER<br>B.Sc,PGDE | BIOLOGY<br>MAHIMA RUPASINGAM<br>B.Sc, PGDE |
| Com. MATHS<br>S.PREMNATH<br>B.Sc | Com. MATHS<br>V.RAJARATNAM<br>B.Sc, PGDE |

**NOBLE ACADEMY**

No. 06C, Ramakrishna Road, Wellawatte,
Colombo 06. Tel : 0112 360 848 | 0112 505 816

தொடர்புகளுக்கு : 074 033 9925

(11750)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டா கோ கமவிலிருந்து யாழ்.நூலகத்துக்கு புத்தகங்கள்

(கொழும்பு)

**ஆசியாவின் மிகப் பெரிய நூலகமான யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டு 41 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் கொழும்பு காலிமுகத்திடலில் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கோட்டா கோ கம போராட்டக்காரர்களால் யாழ். நூலகத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்பாக நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.**




யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டு 41 ஆண்டு நிறைவை ஒட்டி கோட்ட கோ கம வில் கவனயீர்ப்பு நிகழ்வு கடந்த 1 ஆம் திகதி போராட்டக்காரர்களால் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து நல்லெண்ண அடிப்படையில் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (நி-6)

# கோட்டா Gas -ஐ தா அரசுக்கு எதிராக கோஷம்



(ஹற்றன்)

சமையல் எரிவாயு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நோர்வூட் பகுதியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஹற்றன் - சாஞ்சிமலை பிரதான வீதியை மறித்து, வீதி நடுவே 'வெற்று' சமையல் எரிவாயு சிலிண்டர்களை அடுக்கி வைத்து, பதாகைகளை தாங்கியும், கோஷங்களை எழுப்பியும் மக்கள் தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (நி-6)

# அதிகாரப் பகிர்வின் மூலமே தேசிய பிரச்சினைக்கு தீர்வு

## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசு நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள புதிய அரசமைப்பின் மூலம் தமிழ் மக்களின் நீண்டகால தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.



ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அழைப்புவிடுக்கப்படும் இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றியும் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 74 ஆண்டுகளாக தமிழ் மக்கள் விடுக்கும் வேண்டுகோள் அதிகார பகிர்வின் மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண`வேண்டும் என்பதே. அதனை புதிய அரசமைப்பின் மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

போர் முடிவடைந்தவுடன் தமிழ் மக்களின் பிரச்சினையும் முடிவடைந்துவிட்டது என்று நினைத்தால் அது தவறு. 1956 ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் ஜனநாயக முறையில் விடுத்து வரும் வேண்டுகோளுக்கும் அவர்களது எதிர்பார்ப்புகளுக்கும் அரசமைப்பின் மூலம் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

அதிகாரப் பகிர்வே அவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. பெரும்பான்மையானவர்கள் அதனை விரும்பவில்லை எனக் கூறிக்கொண்டு தொடர்ந்தும் அதனைக் தட்டிக் கழிக்க முடியாது.

தமிழ் மக்கள் நாம் சிறுபான்மையாக இருக்கலாம். ஆனால், எமது வேண்டுகோள் நிறைவேற்றப்பட வேண்டும். அது தொடர்பில் பேச்சுகளை நடத்துவதற்கும் இது மிகவும் பொருத்தமான காலமாக உள்ளது.

காலிமுகத்திடலில் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட தின நினைவு நிகழ்வும், போரில் உயிரிழந்த மக்களின் நினைவேந்தல் நிகழ்வும் கூட நடத்தப்படுகின்றது. அதற்காக வருத்தம் தெரிவிக்கப்பட்டு முதல் தடவையாக இவ்வாறு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. இது மிகவும் சிறந்த விடயமாகும்.

போரில் மரணமடைந்த தமிழ் மக்களைப் போன்று போரால் மரணமடைந்த இராணுவத்தினர் தொடர்பிலும் தமிழ் மக்களாகிய நாம் எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறான ஒரு நிலைக்கு நாம் வந்துள்ளோம் என்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

இந்த அடிப்படையிலேயே சுமார் எழுபத்து நான்கு ஆண்டுகள் தொடரும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். நாம் ஒன்றிணைய வேண்டும், ஒன்றாக செயற்பட வேண்டும் என்றெல்லாம் நாடு வீழ்ச்சியடைந்துள்ள இந்தநிலையிலேயே நாம் சிந்திக்கின்றோம். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அதற்காகப் பயன்படுத்துவது சிறந்தது என நான் நினைக்கின்றேன்.

நாடு பெரும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள காலம் இது. இதற்கு முழுமையான தீர்வு காண வேண்டுமானால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுவதுபோல 'சிஸ்டம் சேஞ்ச்' ஒன்று அவசியம். அதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் அது மேலும் காலதாமதமாகும் போது நெருக்கடிகளே அதிகரிக்கும்" என அவர் தெரிவித்தார். (நி-6)

# இந்தியாவிடம் தஞ்சமடைவதை தவிர வேறு வழியில்லை-ஐ.ம.ச சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு அவசியமான உரத்தை வழங்குவதற்கு உடன்பட்டிருப்பதாகவும், அது நாட்டை வந்தடைந்தவுடன் 20 நாட்களுக்குள் அதனை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்நிலையில் அமைச்சுக்கள் உள்ளடங்கலாக அனைத்து அரச ஸ்தாபனங்களிலும் மாட்டப்பட்டிருக்கும் ஜனாதிபதியின் புகைப்படத்தை அகற்றிவிட்டு, அதற்குப்பதிலாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் புகைப்படத்தை மாட்டுமாறு யோசனை முன்வைக்கின்றேன்.

ஏனெனில் இப்போது இந்தியாவிடம் தஞ்சமடைவதைத் தவிர வேறெந்த வழிகளும் இல்லாது போயுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார். (நி-6)

# பைகளின் விலையும் அதிகரித்தது



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தொடராக பாடசாலை பைகள், தொழிலுக்கு கொண்டுசெல்லும் பைகள், வெளிநாட்டு பயணப் பைகள் உள்ளிட்ட அனைத்து வகையான பயணப் பைகளின் விலைகளும் கூடுதல் அளவில் அதிகரித்துள்ளது.

உள்நாட்டு பைகள் உற்பத்திக்கான மூலப்பொருட்கள் பற்றாக்குறை மற்றும் அவற்றின் விலைகள் அதிகரித்தமையும் இந்த விலை அதிகரிப்புக்கு காரணமாகும் என உள்ளூர் பைகள் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இறக்குமதிப் பொருட்களுக்கான வரியை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்துடன், தற்போது அதிக விலையில் காணப்படும் பைகளின் விலைகள் மேலும் அதிகரிக்கும் என பைகள் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னர் 450 ரூபாவாக காணப்பட்ட சிறிய பைகள் தற்போது 950 ரூபாவாகவும், 700 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட பைகள் தற்போது, 1,400 ரூபாவாக அதிகரித்துள்ளன. (நி-6)

# ரணிலுடன் கைகோர்க்கும் சம்பிக்க

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் 43 ஆவது படைப் பிரிவின் தலைவருமான சம்பிக்க ரணவக்க அடுத்த வாரம் பாராளுமன்றம் கூடும் போது ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி சுயேச்சையாக செயற்பட தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சஜித் பிரேமதாஸவிற்கும் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையில் இடம்பெற்றதாக கூறப்படும் ஒப்பந்தமே இதற்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், சம்பிக்க சுயாதீன பாராளுமன்ற உறுப்பினராகி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்தில் 21 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் சம்பிக்க உள்ளிட்ட 43 ஆவது படைப் பிரிவு பகிரங்கமாக ரணிலுடன் இணையவுள்ளதாகவும் [illegible] யுள்ளன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெதர்லாந்து அணிக்கெதிரான தொடரை வென்றது மேற்கிந்திய தீவுகள்



நெதர்லாந்துக் கிரிக்கெட் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

ஆம்ஸ்டெல்வீன் மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நெதர்லாந்து கிரிக்கெட் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து கிரிக்கெட் அணி, 48.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதனைத்தொடர்ந்து 215 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 45.3 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (4)

# இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு ஆலோசகராக மலிங்க



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க, இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் அவுஸ்ரேலியக் கிரிக்கெட் அணிக்கெதிரான இருபது- 20 மற்றும் ஒருநாள் தொடருக்கான இலங்கை அணியின் பந்துவீச்சு ஆலோசகராக லசித் மலிங்க, செயற்படவுள்ளார். இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, மூன்று இருபது -20 போட்டிகள், ஐந்து ஒருநாள் போட்டிகள் மற்றும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கிடையில் முதலாவதாக நடைபெறும் முதல் இருபது-20 எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளது. (4-6)



ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வீதியோட்ட நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. குறித்த போட்டிகள் கனிஷ்ட தர மாணவர் பிரிவு, சிரேஷ்ட தர மாணவர் பிரிவு, கல்லூரியின் பழைய மாணவர் பிரிவு என மூன்று பிரிவுகளில் நடைபெற்றன. (படங்கள்:- ரவிசாந்)



இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சங்கத்தின் மேற்பார்வை உத்தியோகத்தராக மன்னார் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரும் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக் செயலாளருமான ப.ஞானராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். (படம்- ஜோசப்நயன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2630

### அனாமிகா




### சிவகுமார்




### சிவரஞ்சினி





### டேவிட் அனோயன்




### கௌரி




### அபிநயன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்ய கொரோனா நிதியை பயன்படுத்துங்கள்

## ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக கொரோனா நிதியிலிருந்து 1.8 பில்லியன் ரூபாயை வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சுகாதாரத் துறை தொடர்பான கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக நன்கொடையாளர்களிடமிருந்து பணம் சேகரிக்கப்பட்டது. இந்த நிலையில், கொரோனா தொற்று தற்போது கட்டுக்குள் உள்ளதால், சுகாதாரத் தேவைகளுக்காக இந்தப் பணத்தைப் பயன்படுத்த முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் மருத்துவமனைகளுக்குத் தேவையான 234 வகையான மருந்துகள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன.

உலக சந்தையில் மருந்துகளின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இந்நிலைமையைக் கருத்திற் கொண்டு, உள்ளூர் மருந்துத் தொழிற்துறையை துரிதமாக அதிகரிப்பதற்கும் தேவையான மூலப்பொருட்களை இந்தியக் கடன் உதவியின் கீழ் பெற்றுக் கொள்வதற்குமான சாத்தியக் கூறுகளை அவர் சுட்டிக்காட்டினார். (நி-6)

# செவ்வாய்க்கிழமை மீண்டும் எரிவாயு விநியோகம்

(கொழும்பு)

கையிருப்பில் உள்ள சமையல் எரிவாயு கொள்கலன்களின் விநியோகம் முடிவடைவதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனவே, பொதுமக்கள் எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக, வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் சமையல் எரிவாயு விநியோகம் இடம்பெறும் என லிட்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (நி-6)

# 3000 மெற்றிக் தொன் எரிவாயு இலங்கைக்கு

## லாப் காஸ் நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

லாப் காஸ் எரிவாயு நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுக் கப்பல் இன்று இலங்கைக்கு வரவுள்ளது.

கப்பலில் சுமார் 3,000 மெற்றிக் தொன் எரிவாயு கையிருப்பு இருப்பதாக நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக லாப் காஸ் எரிவாயு விநியோகம் கிடைக்கவில்லை, டொலர் நெருக்கடி காரணமாக நாட்டில் எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (நி-6)

# மசகு எண்ணெய் இறக்குமதிக்கு எரிசக்தி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில், 15 நாட்களுக்கு ஒருமுறை மசகு எண்ணெயை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் புத்துயிர் பெற்றுள்ளதாகவும், எரிபொருள் உற்பத்தியை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்போது இடம்பெறுவதைப் போன்று எரிபொருள் விநியோகம் வழமைப் போன்று இடம்பெறும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (நி-6)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
| --- | --- | --- |
| 27 - 05 - 1946 |  | 01 - 06 - 2022 |

## திருமதி.தேவராசா புஷ்பராணி

மன்னாரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் கட்டுடையை வதிவிடமாகவும் கொண்ட அமரர். தேவராசா புஷ்பராணி அவர்கள் 01:06.2022 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர்.தேவராசா அவர்களின் அன்பு மனைவியும், கௌரியம்மா (கௌரி), நாகராணி (சுமதி), ஜெபநேசன் (அமலன்), காலஞ்சென்ற தையல்நாயகி (தங்கா), மேரித்திரேசா (செல்வி), யூதாததேயூ (ரூபன்), தேவதர்சினி, பகீரதன் மற்றும் காலஞ்சென்ற ஏகலைவன் (அஜந்தன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகேந்திரம், தங்கவேல், ரேணுகா, பசில், சாந்தினி, கிரிதாஸ், ரூபினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.06.2022 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் ஆறுகால்மடம் 'இன்பம்' மலர்சாலையில் இடம்பெற்று அவரது பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகிறோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கட்டுடை,
மானிப்பாய்.

தொடர்புகளுக்கு
077 196 4740
077 495 0832
077 617 2809

தகவல்:
குடும்பத்தினர்.

(11728)

# இராசிபலன்

04.06.2022
வைகாசி 21, சனிக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 2.15 மணிவரை

பூசம் முன்னிரவு 7.50 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை

சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்

வளவன்




தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும்.




நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன நன்மையுண்டு.




உறவினர் வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய நட்பால் நன்மையுண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.




நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நபர் உங்களை நாடி வரலாம், பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.




திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆசைப்பட்ட பொருளை வாங்கும் எண்ணம் உருவாகும்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.




எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெற்று மகிழ்ச்சியைக் கொடுக்கும், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.




ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.

உண்மையான காதல் பாதை கரடுமுரடானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்காவிடின் உணவுத் தட்டுப்பாடு விரைவில் உக்கிரமடையும்

(யாழ்ப்பாணம்)

விவசாயிகள் நிலத்தை உழுது பண்படுத்துவதற்கும் நீர் பாய்ச்சுவதற்கும் எரிபொருள் இன்றித் திண்டாடி வருகின்றனர். இதனால், ஏராளமான விவசாயிகள் சிறுபோகச் செய்கையைக் கைவிட்டுள்ளனர். இவர்களுக்கு வேண்டிய டீசலையும் மண்ணெண்ணையையும் தடையின்றிப் பெற்றுக் கொடுக்க அரச உயர் அதிகாரிகள் உடனடியாக ஆவன செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து எரிபொருள் வழங்காவிடின் உணவுத்தட்டுப்பாடு விரைவில் உக்கிரமடையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

விவசாயிகள் எரிபொருட்களைப் பெறுவதிலுள்ள இடர்பாடுகள் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசின் தவறானநிதித் திட்டமிடுதலினாலும் தவறான விவசாயக் கொள்கையினாலும் நாடு உணவு உற்பத்தியில் வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு மோசமான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. கடந்த பெரும்போகம் எதிர்பார்த்த அறுவடையைத் தராத நிலையில், சிறுபோக விளைச்சலும் 50 வீதமாகக் குறைவடையும் அபாயம் நேர்ந்துள்ளது.

உணவுத் தானியங்களின் இறக்குமதிக்கும் அரச கருவூலத்தில் பணம் இல்லாததால் நாடு மிகப்பெரும் உணவுப் பஞ்சத்தை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

உணவுற்பத்தியை ஓர் அவசரகாலச் செயற்பாடாகக் கருதி விவசாயிகளுக்குத் தடையின்றி எரிபொருள் கிடைக்க வழி செய்ய வேண்டும். இதற்கு மாவட்டச் செயலர்களும், பிரதேச செயலர்களும் கமநல அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளும் தாமதமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளும் இதற்கான அழுத்தங்களைக் கொடுக்க முன்வரவேண்டும்.

தவறின் உணவுத்தட்டுப்பாடு மென்மேலும் உக்கிரமடைவதோடு பட்டினிச் சாவுகள் நேர்வதும் தவிர்க்க முடியாததாகிவிடும் என்று தெரிவித்தார். (4-6)

## நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீரவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய சுபகிருது வருஷ துவஜாரோகன மஹோற்சவம் இன்று 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறவுள்ள இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் காலை 7.15 மணிக்கு தேர்த்திருவிழாவும் 14 ஆம் திகதி காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (4-6)

## பாடசாலை மாணவி ஒருவரை தாய்முன் கடத்த முயற்சி

### வட்டுக்கோட்டையில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டுக்கோட்டையில் வீதியில் சென்ற மாணவியின் கையைப் பிடித்து ஹயஸ் வாகனத்தில் கடத்த முற்பட்ட இளைஞர்களை மடக்கிப் பிடித்த மக்கள் நையப்புடைந்து பொலிஸில் ஒப்படைத்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வட்டுக்கோட்டையில் பேருந்தில் வந்து இறங்கிய மாணவியை கூட்டிச் செல்வதற்காக தாயார் மோட்டார் சைக்கிளில் காத்திருந்த வேளை தாயின் கண் முன்னே ஹயஸ் வாகனத்தில் மகளை கடத்த முற்பட்ட போது அங்கிருந்த இளைஞர்களால் மடக்கிப் பிடித்து நையப் புடைத்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்துவதற்காக நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். நாட்டில் சமீப காலமாக சிறுவர்கள் கடத்தல் கொலை போன்ற செய்திகள் அதிகரித்துள்ள நிலையில் இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (4-6-33)

## அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு தாழையம்பதி பார்வதி சமேத அண்ண மகேஸ்வரர் ஆலய வருடாந்தப் பிலவ வருட அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு அலங்காரக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ச்சியாகப் பதினொரு தினங்கள் இவ்வாலய அலங்கார உற்சவம் இடம்பெறவுள்ளதுடன் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூரணைத் திதியில் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (4-6-18)

## சாவகச்சேரி நகரசபையால் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு உதவ ஒரு மில்லியன் நிதி ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை தமது சபை எல்லைக்குட்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய 200 குடும்பங்களுக்கு உலருணவு வழங்க ஒரு மில்லியன் ரூபாவினை சபை நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்துள்ளனர்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போது சபை உறுப்பினர் க.கஜிதன் சில உள்ளூராட்சி சபைகள் பொருளாதார நெருக்கடியான தருணத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு உதவியிருப்பதாக சுட்டிக்காட்டிய நிலையில் சாவகச்சேரி நகரசபையும் அவ்வாறு உதவித்திட்டம் வழங்க முன் வந்துள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள குறித்த நிதியை வறுமை ஒழிப்பிற்கு செலவிடுவதற்கான அனுமதியை விரைவில் தந்துதவுமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பவும் நகரசபையினர் தீர்மானித்துள்ளனர். அந்தவகையில் 200 குடும்பங்களைத் தெரிவு செய்து தலா ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுகள் வழங்கி வைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4-6-30)

## கொடிகாமத்தில் வீடு புகுந்து 50 ஆயிரம் ரூபாய் கொள்ளை

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியொன்றில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 4 மணியளவில் 4 வீடுகளை உடைத்த திருடர்கள் ஒரு வீட்டில் மாத்திரம் ஐம்பதாயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கொடிகாமம் நகர் பகுதியை அண்மித்த பகுதியில் அருகருகே காணப்பட்ட 4 வீடுகளின் ஜன்னல்கள், கதவுகளை உடைத்த திருடர்கள் ஒரு வீட்டில் மாத்திரம் ஐம்பதாயிரம்ரூபாய்பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வீட்டில் உரிமையாளர்கள் இருந்த வேளையிலேயே குறித்த திருட்டு மற்றும் திருட்டு முயற்சிகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4-6-30)

## வேலணை முடிப்பிள்ளையார் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேலணை மேற்கு பெரியபுலம் திருவருள் மிகு மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) தேவஸ்தான சுபகிருது வருஷ மஹோற்சவம் இன்று 4 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ள இவ் ஆலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4-6)



இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சகவாழ்வுச் சங்கத்தின் ஏற்பாட்டில் தேசிய விருது வழங்கும் கலைவிழா கடந்த 28 ஆம் திகதி கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் மேற்படி சங்கத்தலைவர் ஜோர்ச் ஜெஸ்ரின் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவையாற்றும் சமய, சமூகத் தொண்டர்கள் 27 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

## தெல்லிப்பழையில் திருட்டு இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை பகுதியில் உள்ள வீடொன்றில் திருடிய குற்றச்சாட்டில் இருவரை தெல்லிப்பழை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த வீட்டில் கடந்த 28 ஆம் திகதி எவரும் இல்லாத நேரத்தில் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்த ஒரு லட்சம் ரூபாய் பணம், பெறுமதியான பொருட்கள், நகைகள் என்பவற்றை திருடிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அளவெட்டி மற்றும் மாசியப்பிட்டி பகுதிகளைச் சேர்ந்த இருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுப் பதவி அழைப்பை அடியோடு நிராகரித்தார் ராஜித



(கொழும்பு)

சர்வகட்சி அரசில் இணைந்து, அமைச்சுப் பதவியை ஏற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன நிராகித்துள்ளார்.

அவருக்கு சுகாதார அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷகூட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இணக்கம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ராஜிதவுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது.

எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும்வரை, இது சாத்தியப்படாது எனவும், இளைஞர்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தைத் தான் மதிப்பதாகவும் ராஜித சேனாரத்தன எம்.பி. சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் இம்முறை ராஜித சேனாரத்ன கடும் தொனியிலேயே கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

"ஒழுக்காற்று நடவடிக்கை என்பது நகைச்சுவையாக மாறியுள்ளது.

டயானா கமகேவுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அவர் பிரிட்டன் பிரஜை. இதை நிரூபித்தால் எம்.பி. பதவியைக்கூடப் பறித்துவிடலாம்.

ஆனால், இதனை கட்சி செய்யவில்லை. அதனால் தான்டயானா கமகே, எல்லா விடயங்களிலும் கட்சியை விமர்சித்து வருகின்றார். ஹரின், மனுச ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், டயானாவிவகாரத்தை முடிவுக்குக்கொண்டுவர வேண்டும்" என்று ராஜித இடித்துரைத் துள்ளார். (நி-6)

# எரிவாயுவிற்காக வீதிகளில் உறங்கும் மக்கள்



(கொழும்பு)

இலங்கையில் கடந்த சில மாதங்களாக கடும் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள அதேவேளை, கடந்த சில மாதங்களாக எரிவாயு மற்றும் எரிபொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

பல தடவைகள் எரிவாயு கப்பல்கள் நாட்டை வந்தடைந்தாலும் எரிவாயுப் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை.

நாடளாவிய ரீதியிலுள்ள எரிவாயு விநியோக நிலையங்களின் முன்னால் மக்கள் எரிவாயு சிலிண்டர்களுடன் காத்திருக்கும் நிலை தொடர்ந்து வருகின்றது.

மறுபக்கத்தில் கறுப்பு சந்தையில் எரிவாயு அதிக விலைக்கு விற்பனையாகி வருகின்ற சம்பவங்களும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பின் புறநகர் பகுதி ஒன்றில் எரிவாயு நிலையத்தின் முன்னால் வீதிகளில் இரவில் தூங்குகின்ற காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. (நி-6)


## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு கீழ்க் குறிப்பிடப்படும் பணிகளுக்கு பணியாளர்கள் தேவையாக உள்ளது.

**பணி நிலை வெற்றிடங்கள்**

1. பராமரிப்பாளர்கள் (warden)
2. சமையலாளர்கள்
3. சிற்றூழிய பெண் பணியாளர்கள்
4. பண்ணைகளில் கடமையாற்றக் கூடிய ஆண் தொழிலாளர்கள்

**தகைமை**

❖ **பராமரிப்பாளர்களுக்கான தகைமைகள்**

1. வயதெல்லை 25 - 50 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. Child Care NVQ தொழில் தகைமை சான்றிதழ் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
4. தங்கியிருந்து கடமையாற்றுதல் வேண்டும்

❖ **சமையலாளர்களுக்கான தகைமைகள்**

1. வயதெல்லை 25 - 50 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. தங்கியிருந்து கடமையாற்றுவதற்கு விரும்புவோர் முன்னுரிமைப்படுத்தப் படுவார்கள்.

❖ **ஏனைய பணிகளுக்கான தகைமைகள்**

1. வயதெல்லை 25 - 50 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. தொழில் அனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.
3. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தங்கியிருந்து கடமையாற்றுவதற்கு விரும்புவோர் முன்னுரிமைப்படுத்தப் படுவார்கள்.

குறித்த பணிகளுக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் எதிர்வரும் 10.06.2022 இற்கு முன்னர் தங்களது சுயவிபரத்தினை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும்.
குறிப்பு :- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தங்குமிடம், உணவு இலவசமாக வழங்கப்படும்.**

**021 492 3118**
**077 324 0950**

**தொடர்பு முகவரி**
**தலைவர்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

(C-4428)



## மணமக்கள் தேவை

இத்தாலியில் வசிக்கும் எஞ்சினியர் மணமகன், 39 வயது, மகம் 1 ம் பாதம் நட்சத்திர பொருத்தமான மணமகளை ஐரோப்பா அல்லது கனடாவில் எதிர்பார்க்கிறோம்.

கனடாவில் வசிக்கும் 40 வயது உள்ள விவாகரத்து பெற்ற மணமகனுக்கு (கல்வி. M.P.A) அவிட்ட நட்சத்திரம் மணமகளை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் சொந்தக்கடை வைத்து இருக்கும் 30 வயது மணமகனுக்கு சதய நட்சத்திர பொருத்தமான வரனை தேடுகின்றோம். சீதனம் எதிர்பார்க்கவில்லை.

**சொர்க்கம் திருமண சேவை**
**001 416 666 1855/077 650 [illegible]**



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 29 சூரி 4 செவ் 8 இல்<br>உயரம்:5' 9"<br>தகைமை/தொழில்:BA Financial & Management Accounting Ass.Accountant<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி தொழில் புரிபவர்<br>தொ.இ: B/10024 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: சூரி 1 செவ் 11 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்:(BA,BSc) கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ:G/10217 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:33 சூரி 6 செவ் 10 இல்<br>உயரம்:5' 9"<br>தகைமை/தொழில்: தொழில் நுட்பவியலாளர்<br>எதிர்பார்ப்பு:படித்த உத்தியோகம் பார்ப்பவர்<br>தொ.இ: B/10025 | பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் 3<br>கி.பா: சூரி 12 செவ் 2 இல்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்: Cashier at fast Food inducting<br>எதிர்பார்ப்பு: கனடா மட்டும்<br>தொ.இ: G/10228 |
| பிறப்பு: 1989 கிறிஸ்தவம் RC<br>நட்சத்திரம் : கேட்டை 2<br>கி.பா: சூரி 12 செவ் 1 இல்<br>உயரம்:5' 7"<br>தகைமை/தொழில்: தனியார் கணனி கடை<br>எதிர்பார்ப்பு : படித்த அல்லது தொழில் புரியும் பெண்<br>தொ.இ: B/10046 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 68 சூரி 7 செவ் 12 இல்<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்:பொறியியல் பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/10279 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம் : அத்தம் 3<br>கி.பா: 37 சூரி 6 செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L தனியார் நிறுவனம்<br>எதிர்பார்ப்பு :படித்தபெண்<br>தொ.இ: B/10047 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: சூரி 6 செவ் 3 இல்<br>உயரம் :- 5' 5"<br>தகைமை/தொழில்: A/L கனடா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/10285 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**[illegible] கட்டணம் [illegible] ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 63

## தவறுகளை மன்னிப்பது மனித சுபாவம்



ஆபிரிக்காவில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஓர் அரசர் இருந்தார். அவரிடம் பத்து காட்டு நாய்கள் இருந்தன

தவறு செய்யும் தனது ஊழியர்களை அந்த காட்டுநாய்களுக்கு இரையாக்குவார்.

ஒரு நாள் வேலைக்காரர்களில் ஒருவர் தவறான ஒரு கருத்தை சொன்னார் அரசருக்கு கோபம் வந்து விட்டது.

"இவனை நாய்களுக்கு தூக்கி எறியுங்கள்" என்று கட்டளையிட்டார்.

வேலைக்காரன் கெஞ்சினான் "நான் உங்களுக்கு பத்து வருடங்களாக சேவை செய்தேன். நீங்கள் இப்படி ஒரு தண்டனையை எனக்குத் தரலாமா?" எனக்கேட்டான்.

"தயவுசெய்து என்னை அந்த நாய்களுக்கு தூக்கி எறிவதற்கு முன் பத்து நாட்கள் அவகாசம் ஒன்று தாருங்கள்" ராஜா ஒப்புக் கொண்டார்.

அந்த பத்து நாட்களில், வேலைக்காரன் நாய்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் காவலரிடம் சென்று அடுத்த பத்து நாட்களுக்கும் தான் அந்த நாய்களுக்கு சேவை செய்ய விரும்புவதாகக் கூறினான்.

காவலர் குழப்பமடைந்தனர், ஆனாலும் ஒப்புக் கொண்டனர்.

அந்த வேலைக்காரன் அந்த நாய்களுக்கு உணவளித்தான், அவற்றைச் சுத்தம் செய்தான். குளிப்பாட்டவும் தொடங்கினான்

அவற்றிற்கு அனைத்து விதமான வசதிகளையும் வழங்கி அன்பு காட்டினான். பத்து நாட்கள் முடிந்தது. வேலைக்காரனைத் தண்டிப்பதற்காக நாய்களிடம் தூக்கி எறியும் படி அரசர் உத்தரவிட்டார்.

அவன் தூக்கி எறியப்பட்ட போது, அவை ஓடி வந்து அவனின் கால்களை நக்கத் தொடங்கின. இதைக் கண்டு அனைவரும் வியந்தனர் இதைப் பார்த்து திகைத்த அரசன், "என் நாய்களுக்கு என்ன நேர்ந்தது?" எனக் கேட்க வேலைக்காரன் பதிலளித்தான்.

"நான் பத்து நாட்களுக்கு மட்டுமே இந்த நாய்களுக்கு சேவை செய்தேன், அவை என் சேவையை மறக்கவில்லை, நான் உங்களுக்கு பத்து வருடங்கள் சேவை செய்தும் என் முதல் தவறைக் கூட மன்னிக்காமல் நான் உங்களுக்குச் செய்த அனைத்தையும் மறந்து என்னைத் தண்டிக்க உத்தர விட்டீர்கள்.

அரசர் தனது தவறை உணர்ந்து வேலைக்காரனை விடுவிக்க உத்தரவிட்டார்.

நம்மிலும் எத்தனையோ பேர் இப்படி இருக்கிறோம் ஒருவர் செய்த ஒரு தவறுக்காக அவர் எமக்கு செய்த உதவிகளை எல்லாம் மறந்து அவரை வாழ்நாளெல்லாம் ஒதுக்கி வாழும் எத்தனையோ பேர் எம்மிலும் இல்லாமல் இல்லை.

இருக்கிறார்கள். தவறு செய்வது மனித சுபாவம்.

இதை உணர்ந்து தவறுகளை மன்னிக்கப் பழகுவதும் மனித சுபாவம்...

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# 100 ஆவ

# ரஷ்ய – உ

## உக்ரைனின் 20% மான பகு

(கீவ்)

**உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக் எட்டியுள்ளது. இந்த தொடர் தாக்குதல பகுதிகள் ரஷ்யாவின் வசம் சென்றுவிட்ட விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்**

நேட்டோ கூட்டமைப்பில் சேருவதை தடுக்கும் விதமாக கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி முதல் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து வருகிறது. தலைநகர் கீவ், கார்க்கிவ் போன்ற நகரங்களின் பெரும் பகுதியை ரஷ்ய பகுதிகளில் பிடித்து விட்டன. குறிப்பாக மரியுபோல் நகரை முழுமையாக ரஷ்ய படைகள் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டன.

ரஷ்ய இராணுவத்தினர் சுமார்

## உக்ரைனில் மனித உரிமை மீறல்

### சர்வதேச விசாரணைக்கு அமெரிக்கா ஆதரவு

(நியூயோர்க்)

உக்ரைனில் நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் பற்றி சர்வதேச விசாரணைக்கு ஆதரவு அளிக்க அமெரிக்கா தனது நட்பு நாடுகளுடன் இணைந்து செயற்படுகிறது.

உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்ய படையினர் உக்ரைனில் தாக்குதல் நடத்திய போது மனித உரிமை மீறல் நடந்துள்ளதாக அமெரிக்கா குற்றம்

**பறவைகளைத் தாக்கும் வைரஸ்**

## இரண்டு மில்லியன் பறவைகள் கனடாவில் கருணைக்கொலை



(ஒட்டாவா)

கனடா முழுவதிலும் இரண்டு மில்லியன் பறவைகள் கருணைக்கொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கியூபெக் மாகாணத்தின் ஒரு தீவில், ஏராளமான உயிரிழந்த பறவைகள் கரையோரமாக ஒதுங்கிக் கிடக்கின்றன. அதற்குக் காரணம் H5N1 என்னும் பறவைகளைத் தாக்கும் இன்புளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...து நாளை எட்டிய
# உக்ரைன் போர்

## ...குதிகள் ரஷ்ய கட்டுப்பாட்டில் என்கிறார் ஜெலன்ஸ்கி

**...தாக்குதல் 100 ஆவது நாளை ...தலில் தனது நாட்டின் 20% ...ிட்டதாக உக்ரைன் ஜனாதிபதி ...ளார்.**



15,000 பேர் கொல்லப்பட்டுவிட்டதாக உக்ரைன் கூறி வருகிறது. அதே நேரம் பொதுமக்கள் உட்பட பல ஆயிரம் பேரை ரஷ்ய இராணுவம் கொன்று குவித்துள்ளதாக குற்றச் சாட்டு எழுந்துள்ளது.

அதனை மெய்ப்பிக்கும் விதமாக மரியுபோல் நகரில் சில நாட்களுக்கு முன்பு சடலங்களின் குவியல் கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது கிழக்கு டோன்பாஸ் நகரில் சில பகுதிகளை பிடிக்கும் முயற்சியில் ரஷ்ய படைகள் தீவிரம் காட்டி



சாட்டி உள்ளது.

இந்த நிலையில் கடந்த

பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது தாக்குதல் நடத்தியதில் இருந்து ரஷ்ய படைகள் செய்த குற்றங்கள் மற்றும் அத்துமீறல்களுக்கு ரஷ்யா பொறுப்பேற்க வேண்டும் என்று அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் கேட்டுக்கொண்டுள்ளன. (நி-6)


வருகின்றன. தாக்குதல் 100 நாட்களை கடந்துள்ள நிலையில், தங்கள் நாட்டின் 20% பகுதிகள் ரஷ்யாவின் வசம் சென்றுவிட்டதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய இராணுவத்தின் மீது எதிர்த்தாக்குதல் நடத்த சிறை கைதிகளையும் உக்ரைன் களம் இறங்கியுள்ளது.

உக்ரைனின் பெரும்பாலான நகரங்களை ரஷ்யா கபளீகரம் செய்துவிட்டதாக இங்கிலாந்து இராணுவம் கூறியுள்ளது. உக்ரைனுக்கு தொடர்ந்து அமெரிக்கா இராணுவங்களை அனுப்பி வருவதால் இப்போதைக்கு இந்த சண்டை ஓயாது என்றே தெரிகிறது என அவர் தெரிவித்தார். (நி-6)

## பிரிட்டன் ராணி எலிசபேத் பதவியேற்று 70 ஆண்டுகள் நிறைவு

### வண்ண மின்விளக்குகளால் ஜொலித்த அரண்மனை



(லண்டன்)

இங்கிலாந்தின் ராணியாக இரண்டாம் எலிசபெத் முடி சூட்டப்பட்ட 70 ஆண்டு பவள விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

ராணி எலிசபெத் தங்கியுள்ள வின்ட்சர் கேஸ்ட்டில் மாளிகையில் நடந்த வண்ணமிகு நிகழ்ச்சியில் பாண்ட் வாத்தியம் முழங்க எலிசபெத்துக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் அவர் வண்ண மின் விளக்கு அலங்காரங்களை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் ராணி எலிசபெத்தின் பேரனான இளவரசர் வில்லியம் உள்ளிட்ட அரச குடும்பத்தை சேர்ந்த பலர் பங்கேற்று எலிசபெத்துக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

தொடர்ந்து, கண்கவர் விமான சாகச நிகழ்ச்சி நடைபெற்றது. பக்கிங்காம் அரண்மனையின் மேலே பறந்த ஜெட் விமானங்கள் வண்ணங்களை தூவி வானை வர்ணஜாலமாக்கின.

இதுமட்டுமின்றி ஏராளமான விமானங்களின் சாகச நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இதனை பிரிட்டன் ராணி எலிசபெத் மட்டுமின்றி ஏராளமான மக்களும் ஆச்சரியத்துடன் கண்டு ரசித்தனர். இங்கிலாந்து அரச பரம்பரையில் தொடர்ந்து 70 ஆண்டு கால ராணியாக இருப்பவர் இரண்டாம் எலிசபெத் ஆவார். இதனை கொண்டாடும் விதமாக நான்கு நாட்கள் லண்டனில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 96 வயதாகும் எலிசபெத், மிக நீண்ட ஆண்டுகள் ராணியாக இருப்பவர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் ஆவார். (நி-6)

வென்சா வைரஸ் தொற்று என தெரிவிக்கப்படுகிறது.

இந்த H5N1 என்னும் பறவைகளைத் தாக்கும் இன்புளுவென்சா வைரஸ் தொற்று, ஐரோப்பாவிலிருந்து புலம்பெயர்ந்து வந்த பறவைகள் மூலம் வட அமெரிக்காவுக்குள் நுழைந்திருக்கலாம் என்கிறார் கால்நடை மருத்துவ நிபுணர்.

புதிதாக ஒரு வைரஸ் ஓரிடத்தில் நுழையும் போது, அங்கிருக்கும் கால்நடைகளுக்கு அந்த வைரஸுக்கெதிரான நோயெதிர்ப்பு சக்தி இருக்காது. ஆகவே, அந்த வைரஸ் மிகப் பயங்கரமாகப் பரவும் என்கிறார் அவர்.

ஆக, காட்டிலிருக்கும் பறவைகளைத் தொற்றும் அந்த வைரஸ், அந்தப் பறவைகள் மூலம் நாட்டுக்குள்ளிருக்கும் பறவைகளுக்குப் பரவும்.

அவை பரவுவதைத் தடுக்க ஒரே வழி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பறவைகளைக் கொல்வதுதான். ஆகவேதான், கனடா முழுவதிலும், பண்ணைகளில் வளர்க்கப்படும் சுமார் இரண்டு மில்லியன் பறவைகள் கொல்லப்பட்டுள்ளன. (நி-6)

## துப்பாக்கி வாங்குவதற்கான வயதை 21 ஆக அதிகரிக்க ஜோ பைடன் யோசனை

(வோஷிங்டன்)

துப்பாக்கி வாங்குவதற்கான வயதை 21 ஆக அதிகரிக்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் யோசனையொன்றை முன்வைத்துள்ளார்.

அமெரிக்காவில் பொது இடங்களில் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் அதிகரித்து வருகின்ற நிலையில், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜோ பைடன் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், 'அமெரிக்காவில் அதிகரித்து வரும் துப்பாக்கி வன்முறை கலாசாரம் கவலை அளிக்கிறது. துப்பாக்கி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்துவதை தடை செய்ய வேண்டும்.

முடியவில்லை என்றால் நாம் அதற்கான வயதை உயர்த்த வேண்டும். ஒருவர் துப்பாக்கி வாங்குவதற்கான வயதை 18 இல் இருந்து 21 ஆக அதிகரிக்கலாம். அதிக திறன் கொண்ட துப்பாக்கிகளை தடை செய்ய வேண்டும். பாதுகாப்பு சட்டங்களை வலுப்படுத்த வேண்டும், துப்பாக்கி உற்பத்தியாளர்களுக்கு கடும் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்.

இது யாருடைய உரிமையையும் பறிப்பதற்காக அல்ல. நமது குழந்தைகளை, குடும்பத்தினரை, சமூகத்தினரை பாதுகாப்பதற்காகத்தான் என அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள உவால்டே பகுதியில் ஆரம்ப பாடசாலையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 19 சிறுவர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயு சிலிண்டரை பதுக்க முயற்சி

## மாவட்டச் செயலகத்தால் முறியடிப்பு

(நெளுக்குளம்)

வவுனியாவில் பொது மக்களுக்காக வழங்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை பதுக்க முற்பட்ட விநியோகஸ்தரின் முயற்சி மாவட்டச் செயலகத்தினால் முறியடிக்கப்பட்டது இது தொடர்பாக மேலும் தெரியவிக்கையில்,

வவுனியா பட்டாணிச்சூரில் நேற்று அதிகாலை முதல் எரிவாயுவை பெற்று கொள்வதற்காக காத்திருந்த மக்களுக்கு வழங்குவதற்கு என்று 20 எரிவாயு சிலிண்டர்கள் எடுத்து வரப்பட்டன.



காத்திருந்த மக்களுக்கு வழங்காமல் இழுத்தடிப்பு செய்து குறித்த சிலிண்டர்களை பதுக்குவதற்கு விநியோகஸ்தரினால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து அங்கு நீண்ட நேரமாக காத்திருந்த மக்கள் மாவட்ட செயலக அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் மற்றும் அரச அதிகாரிகளின் தலையீட்டால் காத்திருந்த மக்களுக்கு 10 மணியளவில் எரிவாயுக்கள் விநியோகம் செய்து வைக்கப்பட்டது (4-6-250-299)

# மன்னாரிற்கு வருகை தரும் வெளிநாட்டு பறவைகள்



(மன்னார்)

சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் நூற்றுக் கணக்கான பிளமிங்கோ எனச் சொல்லப்படும் வெளிநாட்டுப் பறவைகள் மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளன.

தமிழில் இப்பறவை பெரும் பூநாரை என அழைக்கப்படுகின்றது. இந்தப் பறவைகள் ஆழமற்ற ஏரிகள், சதுப்பு நிலங்கள் மற்றும் ஆபிரிக்கா, ஆசியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் மணல் தீவுகளில் வாழ்கின்றன.

பிளமிங்கோக்களில் 6 இனங்கள் உள்ளன. அவைகள் இறால், ஆல்கா, ஓட்டுமீன்களை சாப்பிடுகின்றன. இடப்பெயர்வின் போது, பிளமிங்கோக்கள் ஒரு மணி நேரத்திற்கு 37 மைல்கள் வரை பறக்கின்றன. மற்றும் 300 மைல்களுக்கு மேல் பயணம் செய்து தங்கள் புதிய வாழ்விடத்திற்கு செல்லக்கூடியவை. பிளமிங்கோக்கள் என்பது நாரைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பறவையாகும். (4-6-285)



சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னார் கீரி கடற்கரை பகுதியில் கரையோர தாய்மையாக்கல் நடவடிக்கை மற்றும் நிழல் தரும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

(படம்: ஜோசப்நயன்)

# இரத்ததான முகாம்



(யாழ்ப்பாணம்)

யா/பெரியபுலம் மகா வித்தியாலய 26 ஆவது சாரணர் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான முகாம் மேற்படி பாடசாலை பிரதான மண்டபத்தில் நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும்.

எனவே அனைத்து குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-6)

# இணுவில் கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் இன்று ஆரம்பம்

(குப்பிழான்)

பிரசித்திபெற்ற இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 25 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவப் பெருந் திருவிழாவில் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை மாலை மஞ்சத் திருவிழாவும், 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும், 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை தீர்த் தோற்சவமும் இடம்பெறும். (4-6-18)

# உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் யாழில் ஆரம்பித்து வைப்பு



(குப்பிழான்)

விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து மனித வள வேலைவாய்ப்புத் திணைக்களம் நடத்திய "உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்" நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த செயற்றிட்டத்தில் பயிற்றை, கத்தரி, புடோல், பாகல், சிறகு அவரை, வெண்டி, கீரை, வல்லாரை, புதினா, அகத்தி, சிறுகுறிஞ்சா, முருங்கை , மரவள்ளி, வத்தாளை ஆகிய விதை, நாற்றுக்கள் மற்றும் மரக்கன்றுகள் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், விவசாயப் பணிப்பாளர் மற்றும் மாவட்டச் செயலகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், துறைசார் திணைக்களத் தலைவர்கள், விவசாயிகள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-6-18)

# மாயமான இளைஞன் வீடு திரும்பினார்

(நெளுக்குளம்)

வவுனியா குருமன்காட்டில் வசித்து வந்த கயேந்திரன் கிருத்திகன் என்ற இளைஞன் கடந்த சில தினங்களாக காணாமல் போய்விட்டதாக அவரது உறவினர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை மேற்கொண்டனர்.

எனினும் நேற்று முன்தினம் மாலை குறித்த இளைஞர் வீடு திரும்பியுள்ளதாகவும் வீட்டில் ஏற்பட்ட முரண்பாட்டினால் யாழ்ப்பாணத்திலுள்ள நண்பர் ஒருவரின் வீட்டிற்கு ஒருவரிடமும் சொல்லாமல் சென்றுவிட்டதாகவும் அதன் பின் காணாமல் போய்விட்டதாக செய்திகள் பரவியதை அடுத்து மீண்டும் திரும்பி வந்து விட்டார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (4-6-299)



யாழ். போதனா மருத்துவமனையில் தற்போது நிலவும் மருந்துகளின் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாக கனடாவில் உள்ள தமிழ் அன்பர்கள் இருவரால் 260 போத்தல் பெட்டடீன் மருந்தும், குழந்தைகளுக்கான பரசிற்றமோல் சிறப் 360 போத்தல்களும் நன் கொடையாக நேற்று வெள்ளிக் கிழமை வழங்கப்பட்டன.

# மோ.சைக்கிள் விபத்து மூவர் மருத்துவமனையில்

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குஞ்சர்கடைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் கிராம உத்தியோகத்தர் உட்பட மூவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதி ஊடாக பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எதிர் எதிரே ஒன்றுடன் ஒன்று மோதியே குறித்த விபத்து இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமற்ற முறையில் வர்த்தகம் செய்வோருக்கு எதிராக நடவடிக்கை

## ஜனாதிபதி கோட்டா உத்தரவு



(கொழும்பு)

**நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையைப் பயன்படுத்தி நியாயமற்ற விலையில் வர்த்தகம் செய்பவர்கள் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறும், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.**

தட்டுப்பாடு ஏற்படாத வகையில் அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் போதுமான அளவு கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். பொருட்களுக்கு தட்டுப்பாடு இருப்பதாகக் காண்பித்து சில வர்த்தகர்கள் விலையை அதிகரிக்கச் செய்யும் திட்டமிட்ட முயற்சிகளை இதன் மூலம் தடுக்க முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வணிகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய துறைகள் எதிர்நோக்கும் சவால்களுக்கு விரைவான தீர்வுகளை காண்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மொத்த சந்தைக்கு விநியோகிக்கப்படும் விவசாய விளைபொருட்களில் ஒரு பகுதியை நேரடியாக கிராம சந்தைக்கும் வழங்க வேண்டும். இதன் மூலம் போக்குவரத்துச் செலவு குறைவடைவதனால், கிராமப்புற நுகர்வோர் குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும், விவசாயிகள் அதிக விலையை பெற்றுக் கொள்ளவும் முடியும் என வும் ஜனாதிபதி தெரிவித்தார். (நி-6)

# நீர்த் தாங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3000 லீற்றர் டீசல்



(அம்பாறை)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பட்டியடிப்பிட்டி பிரதேசத்தில் தேவைக்கு அதிகமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3000 லீற்றர் டீசல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அக்கரைப்பற்று பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை காரணமாக கைப்பற்றப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சூட்சுமமான முறையில் மூன்று நீர்த்தாங்கிகளில் சேகரிக்கப்பட்டு வைத்திருந்த 3000 லீற்றர் டீசலே இவ்வாறு கைப் பற்றப்பட்டது.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவின் ஊழல் குற்றத்தடுப்பு பிரிவினர், பொலிஸ் புலனாய்வு பிரிவினரின் தகவலுக்கு அமைய இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக் குறித்த டீசல் நிரப்பப்பட்ட நீர்த்தாங்கிகள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட டீசல் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். (நி-6)

# ரஷ்ய பயணிகள் விமானம் கட்டுநாயக்கவில் தடுத்து வைப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ரஷ்ய விமானம் தடுத்து நிறுத்தப்பட்டமை தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

ரஷ்ய விமான நிறுவனங்களின் விமானங்களை தடுத்து வைக்க மாட்டோம் என கடந்த மார்ச் மாதம் ரஷ்ய விமான சேவை நிறுவனத்திற்கு இலங்கை அதிகாரிகள் உத்தரவாதம் வழங்கிய நிலையில் இலங்கை ஒப்பந்தங்களை மீறியுள்ளதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது. ரஷ்ய நிறுவனங்களுக்கு சொந்தமான விமானங்களை தடுத்து வைக்க மாட்டோம் என இலங்கை தலைவர் ஒருவரின் உறுதி மொழிக்கு அமையவே தாம் இலங்கைக்குப் பயணம் செய்ததாகவும் இத்தகைய சூழலில் விமானத்தை தடுத்து வைப்பது சிக்கலாக இருப்பதாகவும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

191 பயணிகளுடன் மொஸ்கோவிற்கு புறப்படவிருந்த விமானம் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவுக்கு அமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளது. ஜரிஷ் நிறுவனம் ஒன்றினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை தொடர்ந்து பரப்பும் பொதுபலசேனா

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை பரப்புவதற்காகவும் மத மற்றும் இன சிறுபான்மையினத்தவர்களை கொச்சைப் படுத்துவதற்காகவும் பொதுபல சேனா தொடர்ந்தும் சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

2021 இல் சர்வதேச மத சுதந்திரம் குறித்த தனது வருடாந்த அறிக்கையில் அமெரிக்கா இதனை தெரிவித்துள்ளது.

பொதுபல சேனா போன்ற பௌத்த தேசியவாத குழுக்களினால் வெளிப்படையாக தென்படும் வகையில் முன்னெடுக்கப்படும் சமூக ஊடக பிரசாரங்கள் சிறுபான்மை குழுக்களை இலக்கு வைத்து வன்முறையைத் தூண்டுகின்றன என சிவில் சமூக அமைப்புகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினர் இலக்கு வைக்கப்படுகின்றனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர் என அமெரிக்கா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (நி-6)

# ஜே.வி.பி.தலைவர்கள் - சீனத் தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, முக்கியஸ்தர் விஜித ஹேரத் ஆகியோருக்கும் இலங்கைக்கான சீன தூதுவர் குய் சென் ஹாங் இடையே சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது. ஜே.வி.பியின் பிரதான அலுவலகத்தில் குறித்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

நாட்டில் நிலவிவரும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதாக ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்சிகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சந்திப்பில் சீனத் தூதரக அரசியல் அதிகாரிகள் இருவரும் பங்கு கொண்டனர். (நி-6)

# பலத்த பாதுகாப்புடன் வெளியே வந்த நாமல்

(கொழும்பு)

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளின் போது சேதமாக்கப்பட்ட தமது ஆதரவாளர்களின் சொத்துக்கள் மற்றும் வீடுகளையே நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். மே மாதம் 9 ஆம் திகதி ஏற்பட்ட அமைதியின்மையை தொடர்ந்து பலத்த பாதுகாப்புடன் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ நேற்று வெளியே வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு [illegible] ஆதரவாளர்களின் வீடுகளைப் பார்வையிட்டுள்ளார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 250 | 320 |
| உருளைக்கிழங்கு | 230 | 240 | 230 | 240 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 420 | 500 |
| தக்காளி | 800 | 750 | 650 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 140 | 140 |
| கோவா | 350 | 250 | 300 | 320 |
| கரட் | 200 | 380 | 380 | 400 |
| பூசணி | 120 | 130 | 120 | 120 |
| புடோல் | 260 | 200 | 220 | 300 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 480 | 500 | 200-550 | 500 |
| பெரிய வெங்காயம் | 230 | 240 | 230 | 250 |
| பாகற்காய் | 850 | 700 | 800 | 500 |
| வெண்டக்காய் | 200 | 180 | 180 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 350 | 350 | 300 |
| லீக்ஸ் | 240 | 260 | 280 | 320 |
| பீற்றூட் | 380 | 380 | 280 | 400 |
| கறிமிளகாய் | 600 | 450 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 1200 | 1600 | 1000 | 1600 |
| போஞ்சி | 800 | 750 | 800 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 180 | — | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 40 | 120 | 100 |
| தேசிக்காய் | 600 | 550 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 100-200 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 300 | 180 | 200 |
| வெங்காயப்பூ | — | 600 | — | — |
| முள்ளங்கி | 160 | 200 | — | 280 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 100 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | — | 180 | — | 200 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### மருமகள் எப்படி?



க ண் ணா டி க் கு விரோதி இருந்தாரா? என்றதற்கு அவளது பாட்டி இளமையில் அழகாய் இருந்து முது மையில் அழகை இழ



ந்து இறந்தாள் என்று கூறினாள். அவ்வூரில் அமாவாசை இரவிலும் பௌர்ணமி நிலவு என அவள் கூறியது அவ் வூரில் இரவில் தெருக் களில் பிரகாசமான விள க்குகள் எரிகின்றன என்று பொருள். அவள் தம் ஊர் வயல்களுக்கு ஆண்டு முழுவதிலும் பறவைகள் வந்து போகி ன்றன என்பதன் பொருள் அங்குள்ள வயல்களில் முப் போக சாகுபடி செய்யப்படுகிறது என்ப தாம். இது அங்குள்ள செழுமையைக் குறிப் பதாகும். முடிவில் அவள் விவாகத்தை அவளது தந்தை ஆட ம்பரமாக நடத்தினால் அதற்கு ஏராளமாகச் செலவாகி விடும் என்றும் அத னால் அவளது பெற் றோர்கள் தாம் வசிக் கும் வீட்டை விற்று விட்டு ஓட்டாண்டி யாகி ஆகாயத்தையே கூரையாகக் கொண்டு திறந்த வெளியில் வசி க்க வேண்டி வரும் என்றும் சொன்னாள். இதுதான் கிருஷ்ணன் கேட்ட கேள்விகளு க்கும் அந்தப் பெண் கூறிய பதில்களுக்கு மான பொருள்" என்று கூறினார். அது கேட்ட மாதவ சாஸ்திரியின் மனைவி ஆச்சரியப் பட்டு "அடேயப்பா! நம் கிருஷ்ணன் கேட்ட கேள்விகளில் இவ்வ ளவு அர்த்தம் இருக்கி றதா? பேஷ் பேஷ் இதை எல்லாம் சட்டெனப் புரிந்து கொண்டு அந் தப் பெண்ணும் "டக் டக்"கென்று பதில் சொன்னாளே. அவளும் மிகவும் புத்திசாலி தான். நம் கிருஷ்ண னுக்கு ஏற்றவள் தான்" என்றாள். மாதவ சாஸ் திரியும் "அதற் காகத் தான் இத்தனை நாட் கள் தேடித் தேடிப் பார் த்தேன். வந்த சம்பந் தங்கள் எல்லாம் சரிப் படவில்லை. ஆனால் இந்தப் பெண்ணைப் பற்றிக் கேள்விப்பட்டு நானே வலியப் போய் பார்த்து சம்பந்தம் செய்யத் தீர்மானித் தேன். உனக்கும் திரு ப்தி தானே" என்று கேட்க அவர் மனைவி யும் ஆம் என்று தலையை ஆட்டினாள்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை; செத்தவர் உயிர் பெற்றது போல வும், இழந்த மாணிக் கத்தைப் பெற்ற நாகத் தைப் போலவும், விழி பெற்ற குருடனைப் போலவும், பிள்ளை யப் பெற்ற மலடியைப் போலவும் அவள் விள ங்கினாள்.

"என் உயிரைத் தந்த உத்தமன் நீ" என்று அனுமனை அவள் பாராட்டினாள்.

**சூடாமணியைத் தருதல்**

உள்ளத்தால் இருவ ரையும் ஒன்றுபடுத் திய அனுமன், "கள் ளத்தால் அவளை இரா மனிடம் சேர்க்க முடி யும்" என்று நினைத் தான்; அதற்கு அவள் இசை வினை எதிர் பார்த்தான்.

அவன் பிள்ளை மதி யைக் கண்டு அவள், எள்ளி நகையாடினாள். "கடலிடை அரக்கர் வந்து எதிர்த்தால் உன் நிலைமை என்ன ஆகும்? கைப்பிள் ளையை இடுப்பில் வைத்துக் கொண்டு போராடும் தாயாகத் தான் நீ இயங்க முடி யும்; குழந்தையையும் கீழே வைக்க முடியாது; பகையையும் புறங் கொடுக்கச் செய்ய முடி யாது" என்று உணர்த் தினாள்.

"நீ ஐம்புலன் அடக்கியவன்; என்றா லும், ஆடவன் ஆடவன் தான்; உன் தோள் மீது அமர்வது என் பெண் மைக்கு இழுக்கு" என்று சுட்டிக் காட்டினாள்.

"கோழை ஒருவன், தான் தாழ என்னைச் சிறை எடுத்தான்; கள் வனைப் போல சிறை எடுத்த அவனுக்கும் இறைமை உடைய உன க்கும் வேறுபாடு இல் லாமல் போய் விடும்; நீ நல்லது செய்ய நினைக்கலாம்; அல்ல தாய் உன் செயல் முடி யும்; இதைச் சிந்தி த்துப் பார்". இராமன் அன்புக்கு அவனை இரையாக்குவது தன் மானத்துக்குப் பெருமை; பெண்மை வீறிட்டு எழுந்தால் தீமைகள் அழியும்; இராமனு க்கு இழுக்கு எனக் கருதி அதற்கு அவள் வாய்ப்புக் கொடுக்க வில்லை; "இராமனின் வீரத்துக்குமாசு கற்பி க்கிறாய்" என்றாள்.

'தப்பித்துச் செல்ல நினைப்பதை விட உயிர் விடுவதே மேல்' என்பதைச் சுட்டிக் காட்டினாள்.

காவிய நாயகி கடுஞ் சொற்கள் அவனை அட க்கி வைத்தன; வீர மறக்குலத்தில் பிறந்த பாரதப் பெண் மணி யைக் கண்டான்; "வாழ் க்கை கிடைக்கிறது" என்பதற்காக அவள் தாழ்ந்து போக விரும் பவில்லை; வீர சுதந் திரம் வேண்டி நிற் கும் பேராண்மை அவ ளிடம் காணப்பட்டது.

இ ரா ம னி ட ம் சொல்ல வேண்டிய செய்திகளைக் கனிந்த மொழிகளால் அனும னிடம் அவள் சொல்லி அனுப்பினாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.

– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மருந்துப் பொருட் பங்கீட்டில் பாகுபாடு காட்டாதீர்கள்

பெற்றோல், டீசல், எரிவாயு என்பவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்படும்போது மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவர் என்ற பயத்தில் எரிபொருளை எப்படியாவது வழங்க வேண்டும் என்பதில் அரசாங்கம் கருசனைகாட்டி வருகிறது.

அதேநேரம் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைகள் இடம்பெற முடியாத பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

இதுதவிர, அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகள் காரணமாக ஏழை மக்கள் மிகுந்த கஷ்டத்துக்கு ஆளாகியுள்ளனர்.

ஆம், அரச வைத்தியசாலைகளை நம்பியிருக்கக்கூடிய சாதாரண மக்களுக்கு குறித்த அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கிடைக்காதபோது, அவர்களால் எதுவும் செய்ய முடியாத நிலைமை ஏற்படும்.

அதேநேரம் வசதி படைத்தவர்கள் தனியார் வைத்தியசாலைகளில் அதிகூடிய பணச் செலவில் மருத்துவ சேவையைப் பெற்றுக் கொள்ள, அந்நிலைமையானது ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வை கடுமைப்படுத்தி, சுமுகமான சூழ்நிலைக்குப் பங்கத்தை ஏற்படுத்தும்.

தவிர, விசேட வைத்திய நிபுணர்களும் வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டைக் காரணமாகக் கொண்டு, தனியார் வைத்தியசாலைகளில் தங்கள் சேவைகளை அதிகரித்துக் கொள்வர்.

மருந்துத் தட்டுப்பாடு இல்லாத நேரத்திலேயே அரச வைத்தியசாலைகளில் விசேட சிகிச்சை வழங்குவதில் இழுத்தடிப்புகள் நடப்பதாகவும் அதே ஆளுக்கு அதே வைத்திய நிபுணரால், அதே சிகிச்சை தனியார் வைத்தியசாலையில் உடனடியாக வழங்கப்படுகிறது என்ற கருத்துக்கள் மக்கள் சமூகத்தில் பரவலாகப் பேசப்படுகிறது.

எனினும் இஃது எல்லா வைத்திய நிபுணர்களுக்கும் பொருந்தாது என்ற உண்மையையும் இங்கு நாம் கூறித்தானாக வேண்டும்.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், அரச வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் போது நிலைமை எவ்வாறாக அமையும் என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

இவை ஒருபுறமிருக்க, அத்தியாவசிய மருந்துப் பொருட்களை தமிழர் பிரதேசத்துக்கு வழங்குவதில் மத்திய சுகாதார அமைச்சு இழுத்தடிப்புக் காட்டுவதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்து சேர வேண்டிய மருந்துப் பொருட்கள் இன்னமும் வந்துசேரவில்லை என்பதான தகவல்கள் வேதனையளிப்பதுடன் இனவாத நோக்குடன் மருந்துப் பொருட்களின் பகிர்வும் வழங்கலும் இடம்பெறுகிறதோ என்ற ஐயத்தையும் இச்சூழமைவு தோற்றுவித்துள்ளது.

எனவே இது விடயத்தில் சுகாதார அமைச்சு நேர்மையுடனும் நடுவுநிலையுடனும் செயற்பட வேண்டும்.

## யாழ். நகர் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இயங்கிய விடுதிகள் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகர் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இயங்கிய விடுதிகள் முற்றுகையிடப்பட்டன.

யாழ். மாநகர சபைக் குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள விடுதிகளில் நடைபெறுகின்ற சமூக சீர்கேடு மற்றும் முறைகேடுகள் தொடர்பாக நேற்றைய தினம் யாழ். மாநகர சபை அதிகாரிகளினால் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது சில விடுதிகளில் சமூகப் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபட்டதாக கருதப்படும் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இதில் சில விடுதிகளில் நடைபெற்ற முறையற்ற விடயங்கள் கவனத்திற்கு எடுக்கப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. (ம-18.33)

## பொலிகண்டியில் மயங்கி விழுந்த பெண் மரணம்

வீட்டில் மயங்கி விழுந்த குடும்பப் பெண்ணொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு உயிரிழந்தவர் காவற்கோட்டை, பொலிகண்டி மேற்கைச் சேர்ந்த செல்வராணி செந்திவேல் (வயது- 60) என்பவராவார்.

மேற்படி குடும்பப் பெண் நேற்று வெள்ளிக் கிழமை அதிகாலை நெஞ்சு அடைப்பதாக தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து அவர் மயங்கி விழுந்ததாக தெரிவித்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை வல்வெட்டித்துறை பொலிஸார் நெறிப்படுத்தினர். பிரேத பரிசோதனையில் ஏற்கனவே மூன்று தடவை மாரடைப்பு ஏற்பட்டதாகவும் தற்போதும் மாரடைப்பு ஏற்பட்டே உயிரிழந்ததாகவும் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-60)

## வேலணை மண்கும்பானில் 120 கிலோ கஞ்சா மீட்பு

### சந்தேகநபர் ஒருவர் கைது

வேலணை மண்கும்பான் பகுதியில் சுமார் 120 கிலோ கஞ்சா விசேட அதிரடிப்படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மண்கும்பானில் உள்ள ஓர் வீட்டில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே அதிரடிப்படையினர் சுற்றி வளைத்து பிடித்துள்ளனர்.

இதன்போது 4 மூடைகளில் சுமார் 120 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதோடு அதனை உடமையில் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-18.33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை 5 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ் பிரதேசத்தில்** யாழ்ப்பாண நகரம், அபி கட்டடம், காகில்ஸ் பூட் சிற்றி, கொமர்ஷல் வங்கி- வைத்தியசாலை வீதி, சுகாதாரத் திணைக்களம், புதிய மூன்று மாடிக் கட்டடம்-போதனா மருத்துவமனை, போதனா மருத்துவமனை யாழ்ப்பாணம், ரில்கோ வீதி, பல்பலைக் கழக விடுதி- வைத்தியசாலை வீதி, யாழ் விடுதி, இலங்கை வங்கி யாழ்ப்பாணம், யாழ்.மதர் கெயாரடி, தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாணம், பிறவுன்ஸ் - மருத்துவமனை வீதி, கந்தப்பசேகரம் வீதி, முனீஸ்வரன் வீதி (செல்லாத் தியேட்டர் அருகில்)ஆகிய பிரதேசங்களிலும் மின் சாரம் தடைப்படும்.

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது நிலவும் மருந்துகளின் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாக மருந்துப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் தற்போது நிலவும் மருந்துகளின் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாக கனடாவில் உள்ள தமிழ் அன்பர்கள் இருவரால் 260 போத்தல் பெட்டடீன் மருந்தும் குழந்தைகளுக்கான பரசிற்றமோல் சிறப் 360 போத்தல்களும் நன்கொடையாக நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

இந் நன்கொடையினைத் தக்க தருணத்தில் மனமுவந்து தந்தமைக்கு வைத்தியசாலைச் சமூகம் சார்பாக நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் சிறுவர்களுக்குத் தேவையான பரசிற்றமோல் சிறப் வெளிநோயாளர் பிரிவில் தேவையான நோயாளிகளுக்கு வழங்கப்படும் என்றும் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனாநந்தா தெரிவித்தார். (ம-18.33)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### இறைவனை வழிபடும் முறை



❖ தூய்மை என்பது அகத்தூய்மை, புறத்தூய்மை என இரண்டு வகைப்படும். உடலை நீராலோ, மண்ணாலோ, வேறு பொருட்களாலோ தூய்மை செய்வது ... அதாவது குளித்தல் போன்றவை புறத்தூய்மை, புறத்தில் அழுக்கு என்று இருந்தால் அது சரியாக இருக்காது. இரண்டும் சேர்ந்து வாய்க்க முடியாத போது அகத்தூய்மையை நாடுவது நல்லது. ஆனால் இந்த இருவகை துய்மையும் இல்லாமல் ஒருவன் [illegible] தோத்திரம், சிந்தனை, பக்தி ஆகியவைகளின் மூலம் இறைவனை வழிபட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை

# அப்பாவிச் சிறுமியை பலி கொண்டுவிட்டது

தற்போது எமது நாட்டு பிள்ளைகளின் விதி அனைவரினதும் கண்களில் கண்ணீரை வரவழைக்கும் கதைகளையே சுமந்து வருகின்றது. அவ்வாறான துயரம் மிகுந்த சம்பவம் ஒன்று பண்டாரகம அட்டுளுகம பிரதேசத்திலிருந்து எமது காதுகளில் ஒலிக்கின்றது.

சிறுவயதில் இருந்தே அட்டுளுகம பிரதேசத்தில் வசித்த குடும்பமொன்றின் மூன்றாவது பெண் குழந்தையே இவ்வாறான துயரத்திற்கு கடந்த 27 ஆம் திகதி முகம் கொடுத்துள்ளது.

நாட்டையே உலுக்கிய அட்டுளுகம பிரதேசத்தில் 9 வயது சிறுமியின் கொலை தொடர்பில் அடிக்கடி சிறுமியின் வீட்டுக்கு வந்து போகும் 'ஐஸ்' போதைப் பொருளுக்கு அடிமையான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். 29 வயதுடைய அச்சந்தேக நபர் தானே இக்கொடூரமான கொலையைச் செய்ததாகவும் ஒப்புக் கொண்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் ஐஸ் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும், சிறுமியின் தந்தையுடன் இணைந்து போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வந்துள்ளதுடன் அடிக்கடி சிறுமியின் வீட்டுக்கு வருகை தந்துள்ளமையும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுமி காணாமல் போனதையடுத்து கிராமம் முழுவதும் சிறுமியைத் தேடியபோது, குறித்த நபரும் சிறுமியைத் தேடும் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார். என்பதை அங்கு பதிவான சி.சி.ரி.வி கமரா காட்சிகளில் பதிவாகியுள்ளது.

இதேவேளை கோழி இறைச்சி வாங்கச் சென்ற சிறுமி வீதியில் நிற்பதை கண்ட ஒரு பெண் "தனியாக இங்கே ஏன் நிற்கிறாய்?" என்று வினவிய போது "தந்தைக்காக காத்திருக்கிறேன்" என்று அச் சிறுமி சொன்னதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

இது இவ்வாறிருக்கையில், சிறுமி கோழி இறைச்சி வாங்குவதற்கு கடைக்குச் சென்று திரும்பாத நிலையிலும், அங்கு கோழிக்கறி சமைக்கப்பட்டிருந்ததாகவும், காலையில் காணாமல் போன பிள்ளை தொடர்பில் பிற்பகல் 2 மணியின் பின்னரே முறைப்பாடு செய்யச்சென்றதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் மேற்படி கொலையாளி குழந்தை ஆயிஷாவை பாலியல் துஷ்பிரயோகம் செய்து கொலை செய்யவில்லை என்று பரிசோதனை முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. அவ்வாறெனில் எதை மறைக்க அல்லது எந்த நோக்கத்துக்காக அவன் குழந்தை ஆயிஷாவை கொலை செய்தான்? இதுவே அறிய முடியாத புதிராக உள்ளது.

ஒன்பது வயதான பாத்திமா ஆயிஷா அக்ரம், அட்டுளுகம அல்கஸ்ஸாலி மகா வித்தியாலயத்தில் நான்காம் வகுப்பில் கல்வி கற்று வந்துள்ளார்.



அவர் வீட்டில் படித்துக் கொண்டிருக்கும் போது அவரது தாய் அண்மையில் உள்ள கடைக்குச் சென்று கோழி இறைச்சி வாங்கி வரும் படி கூறியுள்ளார்.

பின்னர் தாயிடம் காசையும் பையையும் வாங்கிக் கொண்டு வீட்டில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் உள்ள கடைக்கு கடந்த 27ஆம் திகதி 10 மணிக்கு சென்றுள்ளார். கடைக்குச் சென்ற மகள் ஒரு மணித்தியாலமாகியும் வீடு திரும்பாததால் பெற்றோர் எங்கும் தேடிவிட்டு பண்டாரகம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

அருகிலுள்ள இடங்களில் அப்பிள்ளையை உறவினர்களோடு தேடியதோடு அவ்வாறு தேடிய பின்னர் கண்டுபிடிக்க முடியாததால் பெற்றோரால் பொலிஸில் முறைப்பாடு செய்ததாக பண்டாரகம பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு தலைவி, பெண் பொலிஸ்பரிசோதகர் ஹேமமாலி கூறினார்.

சிறுமி காணாமல் போனது தொடர்பாக பண்டாரகம பொலிஸார் விரைவாக செயற்பட்டு விசாரணைகளை ஆரம்பித்ததோடு கிடைத்த ஆலோசனைகளின் பேரில் பாணந்துறை தொகுதி குற்ற விசாரணை பிரிவு மற்றும் புலன் விசாரணை அதிகாரிகள் இணைந்து விரிவான விசாரணையை நடத்தினர்.

ஆயிஷாவுக்கு என்ன நடந்தது என அறிவதற்காக பொலிஸாரும் அப்பிரதேச மக்களும் இணைந்து அவர் கோழி இறைச்சி வாங்கச் சென்ற கடைக்கு சென்ற பாதை, மீண்டும் வீட்டுக்கு வரும் பாதையை ஆராய்வதன் மூலம் தமது தேடுதல்களை ஆரம்பித்தனர்.

அந்த நடவடிக்கைகள் கடந்த 28 ஆம் திகதி மாலை வரை நடைபெற்றதோடு ஆயிஷாவின் வீட்டில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள அட்டுளுகம பெரிய பள்ளி என்னும் பிரதேசத்தில் அமைந்துள்ள பற்றைக்காடு ஒன்றில் உள்ள சதுப்பு நிலத்தில் பிரதேசவாசிகள் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டார்கள்.

அங்கு மழைநீரும், கழிவுநீரும் வடிந்தோடும் சிறிய ஓடையில் அவரது சடலம் புதைக்கப்பட்ட இடத்தை பிரதேச மக்கள் கண்டுபிடித்து அதனை பொலிஸாருக்கு அறிவித்தனர். அதன் பின்னர் பொலிஸார் ஆயிஷாவின் உடலை மீட்டனர்.

பிரதேசத்தில் பெய்த மழை காரணமாக புதைத்த உடலின் காலின் பகுதி மேலே தெரிந்ததாகவும் அவரின் பாதணிகள் ஓடைக்கு அருகில் கிடந்ததாகவும் அதனைக் கண்ட மூன்று இளைஞர்கள் அந்த ஓடை வழியே தேடிய போது புதைக்கப்பட்ட நிலையில் உடலை கண்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஆயிஷா தனது வீட்டில் இருந்து 200 மீற்றர் தூரம் உள்ள கடைக்குச் சென்று கோழி இறைச்சியை வாங்கிக் கொண்டு திரும்பவும் வீட்டுக்கு வரும் காட்சி சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியிருந்ததோடு அதன்படி விசாரணை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் கூறும் விதத்தில் இவரின் மரணம் கொலை என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. பாத்திமா அட்டுளுகம பிரதேச மக்களின் அன்பை பெற்ற குழந்தையாவார். அவர் கல்வி கற்பதில் திறமையானவர். அனைவரிடமும் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் பழகியவர். அவரின் தந்தையான முஹம்மத் அக்ரம் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக இருந்தவர் என்றும், சிறுமி காணாமல் போன வேளையில் அவர் வீட்டில் இருக்கவில்லை என்றும், கடைக்குச் சென்ற மகள் வீட்டிற்குத் திரும்ப வராததால் கலவரமடைந்து பொலிஸில் முறைப்பாடு செய்ததாகவும் அவரது தாயாரான பாத்திமா மும்தாஜ் தெரிவித்தார்.

அவரின் உடல் கிடைத்த ஓடைக்கு செல்லும் பாதை அவரது வீட்டிற்கு செல்லும் பாதை அல்லவென்றும் வீட்டிற்குச் செல்லும் பாதையில் திரும்பிச் செல்லும் ஒரு குறுகிய பாதையிலேயே ஓடை அமைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அதனால் குறுக்குப் பாதையில் தங்கியிருந்த யாரோ ஒரு நபரே சிறுமியை அந்தப் பாதையில் அழைத்து சென்றமை தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ளதாக விசாரணை நடத்தும் பொலிஸார் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தனர்.

ஏதேனும் குற்றம் இழைக்கவோ அல்லது சிறுமியின் கையில் இருந்த பணத்தை கவரும் நோக்கத்துடனோ அதனைச் செய்திருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் சிறுமிக்கு அந்த சதுப்பு நிலத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவரின் பெற்றோர்களிடமிருந்து கிடைத்த சாட்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

சிறுமியின் காலணிகள் இருந்த இடத்தையும் சடலம் கிடைத்த இடத்தையும் நோக்கும் போது அவரின் மரணம் குறுக்குப் பாதையில் நடைபெறவில்லை என்றும் ஓடைக்கு செல்லும் பாதையிலேயே நடந்துள்ளதாகவும் சந்தேகம் எழுவதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறோ குழந்தை ஆயிஷாவின் கொலையுடன் தொடர்புடையவர்கள் உடன் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும்.. இல்லையேல் அப்பாவிச் சிறுவர்களின் உயிர்ப் பலி எடுப்பு நிறுத்தப்படமாட்டாது.

இந்த நாட்டின் எதிர்காலமான சிறுவர்களின் பாதுகாப்பை நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதி செய்ய வேண்டும். சமூகத்தில் இவ்வாறான குற்றவாளிகள் இருப்பின் அவர்களை கண்டறிந்து அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நாம் அனைவரும் முன் வரவேண்டும். அப்போதே சிறுவர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்ணீர்த்...

ளார்.

அங்கு சிறுமியை நிறுத்திவிட்டு தாய் கச்சான் அறுவடை செய்து கொண்டிருந்த போது விளையாடிக் கொண்டிருந்த 3 வயது சிறுமி அங்கிருந்த தண்ணீர்த் தொட்டியில் விழுந்து நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

கச்சான் அறுவடை செய்து கொண்டிருந்த தாயார் சிறுமியை காணவில்லை என தேடியபோது சிறுமி தண்ணீர்த் தொட்டியில் விழுந்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. சிறுமியை மீட்டு பூவசரன்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னரே சிறுமி மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த கிருசாந்தன் தட்சாயினி என்ற 3 வயது சிறுமியே இவ்வாறு மரணமடைந்தவராவார். இது தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-250.299)

## சாதாரண...

யில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கரணவாய் மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த செல்வமோகன் பானுஜன் (வயது- 17) என்ற மாணவனே ஸ்தலத்தில் பலியாகியுள்ளார்.

அவருடன் சென்ற அதே பகுதியைச் சேர்ந்த சிவனேசன் கலைஒளி (வயது- 15) என்ற சிறுவன் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் வீதியால் பயணித்தபோது மாடு ஒன்று குறுக்கே சென்ற நிலையிலே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பலியான மாணவன் இம்முறை இடம் பெற்ற க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவராவார்.

வெளிநாட்டில் வசித்து வந்த அவரின் தந்தையார் ஊருக்கு வந்த நிலையில் ஆலயம் ஒன்றில் பொங்கல் செய்ததாகவும் பூசைக்கு தேவையான மாலை வாங்குவதற்காக சென்றபோதே இச் சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மரணமான மாணவனின் சடலம் மரண விசாரணைக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-18,33,60)

## தொலைத்...

மாக அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வற் வரி கடந்த 1 ஆம் திகதியிலிருந்து 8 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## லாஃப் காஸின்...

சிலிண்டர் 6,850 ரூபாயாகவும் 5 கிலோ லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டர் 2,740 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ம)

## நாடு முழுவதும்...

பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்படவுள்ள உணவுப் பஞ்சத்தில் இருந்து நாட்டு மக்களைக் காப்பாற்றும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பசளை தட்டுப்பாட்டுக்கு மாற்று வழிகளைக் கண்டறிதல், உள்நாட்டு பயிர்ச் செய்கை முறைகளை பிரபல்யப்படுத்துதல், உள்நாட்டு உணவுப் பயிர்ச்செய்கைக்கு முக்கியத்துவம் அளித்தல் போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இதற்கான நிதியுதவிகள் மற்றும் ஏனைய ஒத்தாசைகளை கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் தன்னார்வ அடிப்படையில் வர்த்தகர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி எதிர்பார்த்துள்ளது.

கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் கிராமிய ஆதரவாளர்களை இணைத்துக் கொண்டு இந்த திட்டத்தை முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. (ம)

## இன்றுமுதல்...

மேற்கொள்வதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வடக்கு, கிழக்கில்...

இந்த விட[illegible] அமரவீர தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பல ஏக்கர் காணிகளை வனபாதுகாப்பு திணைக்களம் கைப்பற்றி வைத்துள்ள நிலையில் நாட்டில் உணவுக்கு கடுமையான நெருக்கடி ஏற்பட்டுள்ள காரணத்தால் இவ்வாறு மக்களின் வயல் காணிகளை விடுவிக்க பணிப்புரை விடுத்துள்ளது.

உணவு தட்டுப்பாட்டை இல்லாமல் செய்ய அனைவரும் வெற்று நிலங்களில் விவசாயம் செய்யுமாறு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சொத்து...

ளனர்.

குறித்த வழக்கு விசாரணைகள் நேற்று கம்பஹா மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி நிமல் ரணவீர இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (ம)

## நாட்டின்...

அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே பிரதமர் ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைக்கு வெளியில் இருந்து சில பில்லியன் டொலர்கள் தேவை, இல்லை எனில் இலங்கையால் மீளமுடியாது.

தற்போது, பெற்றோலுக்கான வரிசைகள் இல்லை, ஆனால் நான் பிரதமரின் வேலையை மட்டுமல்ல, தீயணைப்பு வீரரின் வேலையைச் செய்ய வேண்டும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை.

நாடு நெருக்கடியின் தொடக்கத்தில் மட்டுமே உள்ளது. இன்னும் மோசமான நிலை வரப்போகிறது.

பருவங்களுக்கு போதுமான உரங்கள் இல்லாததால், இலங்கையில் உணவு நெருக்கடி ஏற்படலாம், அடுத்த பருவத்திற்கு உரம் கிடைத்தால், அடுத்த ஆண்டு பெப்ரவரிக்குள் தன்னிறைவு அடைவோம்.

மக்கள் ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட மாட்டார்கள், ஒரு நாளைக்கு இரண்டு வேளை மட்டுமே சாப்பிடும் காலம் வரும்.

நட்பு நாடுகளின் உதவியில்லாமல் இந்த ஆண்டை கடக்க முடியாது.

உதவிக்காக நட்பு நாடுகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

மற்ற நாடுகள் அனைத்தும் இலங்கைக்கு உதவிசெய்வதை தவிர்த்த நிலையில் இந்தியா முன்வந்திருப்பது இலங்கைக்கு அதிர்ஷ்டம்.

இலங்கை தனது தவறுகளுக்கு மன்னிப்புக் கோருவதும், ஆதரவிற்காக நண்பர்களுடன் சமாதானம் செய்வதும் அவசியம்.

இலங்கையை இரண்டு நெருக்கடி பாதித்திருக்கின்றது, ஒன்று ஏற்கனவே தொடங்கிவிட்டது. அதுதான் இலங்கையின் பொருளாதார நெருக்கடி.

இரண்டாவது நெருக்கடியானது உக்ரைன் நெருக்கடியின் உலகளாவிய தாக்கம் என்றும் இலங்கை அதன் ஆரம்பத்தை மட்டுமே பார்க்கிறது" என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## 21ஆவது திருத்த...

21ஆவது திருத்தச் சட்ட மூலம் எதிர் வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் முன்வைக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

21ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் தொடர்பில் அனைத்துக் கட்சி தலைவர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் நேற்று மாலை பிரதமர் அலுவலகத்தில் இடம் பெற்றது. (ம)

## அத்தியாவசியப்...

மிட்ட முயற்சிகளை இதன் மூலம் தடுக்க முடியும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ம)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1253
வெற்றி இலக்கங்கள்
தனுசு 6 5 6 1 5 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.06.03 சீட்டிழுப்பு இலக்கம் 3017
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 02 28 56 79
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 03/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1123
வெற்றி எழுத்து G சுப்பர் இலக்க 08 வெற்றி இலக்கங்கள் 02 26 29 61

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.03
சீட்டிழுப்பு இலக்கம் 084
சிம்மம் 01 02 29 46 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/06/03
சீட்டிழுப்பு இலக்கம் 4775
ஆங்கில எழுத்து N வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 3 4 1 3 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.06.03
சீட்டிழுப்பு இலக்கம் - 805
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 21 47 57 79

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1576
சீட்டிழுப்பு திகதி: 2022.06.03
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,438,700/-
வெற்றி இலக்கங்கள் 05 16 17 70 T

சனிதா Shanida
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.06.03
சீட்டிழுப்பு இல: 3911
வர்ணம்: செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,997,840/-
வெற்றி இலக்கங்கள் 06 42 43 60 M

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 178
சீட்டிழுப்பு திகதி 2022.06.03
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 23 26 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,805,020/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,282,706.20
திகதி 2022-06-03
வெற்றி வாரம் 3462
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 16 21 40 59
விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 8,011,000/-

12 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 22 32 53 60 75
சீட்டிழுப்பு வாரம் 926
2022.06.03 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 239,982,469/-
தொலைபேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1750 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.06.03 தினம் வெள்ளிக்கிழமை
M 03 35 36 57
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,312,060/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை ஆரம்பம்

## A/L- 2024

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

**DMI Jaffna**

✆- 077 848 0604

(11668)

---

தரம் 6 - 11 வரை தமிழ்
தரம் 10, 11 இலக்கியநயம்
தரம் 6 - 11 குடியியற்கல்வி
A/L அளவையியலும் விஞ்ஞானமுறையும்

ஆகிய பாடங்கள் தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும்.

**076 157 4764**

(11727)

---

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கி வரும் புடைவைக் கடைக்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை. சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் வசிப்போர் விரும்பத்தக்கது.

(11735)

**077 172 3554**

---

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1980 இல் பிறந்த சதயம் 1 ஆம் பாதம், Accounts Assistant சகல வசதிகளும் உடைய மணமகனுக்கு மணமகள் தேடுகின்றோம்.

(11708)

**077 367 1062**

---

# DCM

யாழ்.நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

## A/L 2024

## கலை, வர்த்தகம்

ஆரம்பம்: 05.06.2022
காலை 8.00 மணி

### கலைப் பிரிவு

**தமிழ்** - வழமையான முன்னணி ஆசிரியர்
**புவியியல்** - P.S.V. தினேஸ்
**இந்து நாகரிகம்** - T.ஸ்ரீஸ்
**அரசியல்** - பொன் சந்துரு
**வரலாறு** - S.S.Y. பிரதீபன்
**அளவையியல்** - T.T. நீதன்
**ஊடகக்கல்வி** - N.தீபன்
**ICT** - லவேந்திரன்
**நாடகமும் அரங்கியலும்** - M.ஐங்கரன்
**கிறிஸ்தவ நாகரிகம்** - J.J.வசந்தன்
**விவசாய விஞ்ஞானம்** - B. பாலசுதன்
**மனைப்பொருளியல்** - S.விக்கி

### வர்த்தகப் பிரிவு

**பொருளியல்** - S.ஜெயக்குமார்
**கணக்கீடு** - S.தவா
**வணிகக்கல்வி** - N.S. கபில்

அனுமதிகளை அலுவலகத்தில் பெறலாம்.

நிர்வாகம் - 077 011 9434

(11709)

---

# DCM - யாழ்.நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

## A/L 2024 கலை, வர்த்தகம்

ஆரம்பம் : 5.6.2022 காலை 8.00 மணி

அனுமதிகளை அலுவலகத்தில் பெறலாம். நிர்வாகம் : 077 011 9434

(11710)

---

## கணக்கீடு

பிரத்தியேக / குழு வகுப்புக்கள்

A/L 2022, A/L 2023, A/L 2024

கொழும்புத்துறை/ கந்தர்மடம்

**077 216 8884**

A+++ சித்தி பெறுவதற்கான
புதிய அணுகுமுறையில் புதிய கற்பித்தல்...

நீண்ட கால அனுபவம் கொண்ட யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்

திரு.க.பா.பாலகஜன் (Tutorial staff)
B.com(Jaf),H.N.Dip. in ACC (ATI),Dip. in Edu(OUSL), M.Com(Hons), ACC.Spl

(11485)

---

இயங்காத நிலையில் உள்ள அனைத்துவிதமான தொலைபேசிகளும் கொள்முதல் செய்யப்படும்.

**A.R.K MOBILE SHOP**

No.62, Hospital Road, Jaffna.
(மரக்கறிச் சந்தைக்கு முன்பாக)

(11739)

---

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஓட்டுமடம் 1 ஆம் ஒழுங்கையில் சுற்று மதிலுடன் கூடிய 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இக் காணிக்கு அராலி வீதி ஊடாக பாதை உண்டு. (2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்)

பார்வையிடும் நேரம் : காலை 8.00 தொடக்கம் மாலை 6.00 வரை

தொடர்பு

**076 844 6536, 074 008 9086**

(11731)

---

# DCM

சுன்னாகம்

## A/L 2024

| கலை, வர்த்தகம் | கணித, உயிரியல் |
|---|---|
| ஆரம்பம் - 06.06.2022 8 மணி | வகுப்புக்கள் ஆரம்பம் - 06.06.2022 8 மணி |
| பொருளியல் - திலக்சன் | உயிரியல் - A.தர்சன் |
| கணக்கீடு - சுஜி | பௌதிகவியல் - A.கபில் |
| வணிகக்கல்வி - லோசிதகுமார் | இரசாயனவியல் - T.சாரங்கன், B.கரிசத்தி |
| தமிழ் - லிங்கம் | இணைந்த கணிதம் - R.A. சிந்துஜன் |
| I.C.T - மோகன் | |

(11730)

---

## தென்னிந்திய யாத்திரை

நாட்கள் - 16 ஆரம்பம் - 01.07.2022

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா. 5 மாநிலங்களுக்கூடான யாத்திரை. 10 பேர்.
உடன் விபரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்க

விபரங்களுக்கு:- கலாநிதி T.ஶ்ரீரெங்கநாதன்
T.P:- 077 768 0102

(C-4426)

---

# TECHNO WORLD

## தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

## A/L 2024

### தொழினுட்ப பிரிவு

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, விவசாயம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம் (7), சித்திரம்

திகதி:- 05.06.2022
ஆரம்ப நேரம் - 9.00 am

(C-4424)

Call Now: 077 017 5346

---

## SPOKEN WITH GRAMMAR வகுப்புக்கள்

- 2022 க.பொ.த (சா/த) மாணவர்கள்,
- பல்கலைக்கழக மாணவர்கள்,
- அரசபணி உத்தியோகத்தினர்கள்,
- வெளிநாட்டில் உயர்கல்வியை தொடர்விரும்புபவர்கள்,
- ஒவ்வொரு பிரிவினர்களுக்கும் தனித்தனி வகுப்பு ஒழுங்குகள்.

(C-4425)

அனுமதிகள்/பதிவுகளுக்கு:
**WEC COLLEGE**
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
0779265447,0217200989
கிளை: சங்கத்தானை, சாவகச்சேரி

---

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

---

# K.P.C - கோண்டாவில்

(366/8, இருபாலை வீதி - ஐயப்பன் கோவில் அருகில்)

## A/L 2024

வர்த்தகப் பிரிவிற்கான பிரத்தியேக வகுப்புக்கள்
ஆரம்பம் : 06.06.2022 திங்கள் 03.00 pm

பொருளியல் : MR. S. Jeyakumar
கணக்கீடு : MR. A.T. Suren
வணிகக்கல்வி : MR. T.S. Richi

(11718)

தொடர்புகளுக்கு - **077 723 8597**

---

## A/L 2024 தமிழ்

### பா.பத்மநாதன்

B.A (Hons) (Tamil Spl) 1st Class,
M.A (Tamil) 1st Class,
M.Ed (Hons) 1st Class, Dip.in Ed.

(11713)

| | |
|---|---|
| C.C.A சுன்னாகம் (11.06.2022 - 8 AM) | சித்திவிநாயகர் - மல்லாகம் (11.06.2022 - 2 PM) |
| மொடேன் - சண்டிலிப்பாய் (06.06.2022 - 4 PM) | மகுடம் - உரும்பிராய் (11.06.2022 - 11 AM) |

---

## Pearson International College

### Applications are called for IELTS tutors

- Candidates should have minimum HND in English or anu other undergraduate in English medium
- Previous IELTS score above or equal to 6.5 is recommended (not mandatory)
- Prior teaching experience would be an added advantage
- Should be able to work during week days

Email your CV within three days of this advertisement to pearsoncollege2020@gamil.com

Call +94 74 188 7878 for more info

(11704)

No.21, 3rd Lane, Power house Road, Jaffna.

---

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

(11744)

**077 814 7389,
077 241 7589 - ஜெயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.